(5) அறிக்கை அளித்தல்.

கால்நடை வளர்ப்புத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Sir, I have pleasure to present **the last report of the Committee on Estimates on Animal Husbandry Department. I express my sincere thanks to the hon. Members and the House for preparation of the Report.**

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(2) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/72.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

இச்சட்ட முன்வடிவை முன்னுரைக்கையில், நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல் வரியை ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து பேரளவு வீதமாகிய இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்த இச் சட்ட முன்வடிவு விழைகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். தமிழ் நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) கீழ் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி, ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய முக்கிய வருவாய்களில் ஒன்றாகும். நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற்போது விதிக்கப்படும் பேரளவு செஸ் மேல்வரி ஒரு ரூபாய் ஐம்பது காசாகும். 1—3—1972-ல் முதலமைச்சர் அளித்த வரவு-செலவுத் திட்ட உரையில் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சிறு கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் முக்கியமாகக் குடி-நீர் வசதிகளை ஏற்பத்திக் கொடுக்கவும், இணைப்புச் சாலைகளைப் போடுவதற்கும் இயலும் வகையில், நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் தற்போது விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி பேரளவு வீதமாகிய ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து இரண்டு ரூபாய் ஐம்பது காசாக உயர்த்தப்படும் என்று குறிப்பிடப்பட்டது.

---

* 28—3—1972 -ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.